II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 483 of 2022**

Deposition of witness for the Defendant / DW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 11/08/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Paulraj | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை=

வாதி எனக்குத் தெரிந்தவர். வா.சா.ஆ.1 ஆன அடமான பத்திரத்தை எனது தந்தை அல்போன்ஸ் வாதி கோபாலகிருஷ்ணனுக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் நான் தான் கடன் வாங்கினேன். வா.சா.ஆ.1ல் என் தந்தை என்ன எழுதிக்கொடுத்துள்ளார் என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1ல் என் தந்தை ரூ.7 லட்சம் கடனாக வாங்கியதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடனுக்கு மடவிளாகத்தில் உள்ள சொத்தை ஈடாக காட்டியுள்ளோம் என்றால் சரிதான். என் தந்தை இறந்துவிட்டார். கடன் தொகைக்கு ரூ.100க்கு ரூ.2 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டோம். இந்த வழக்கில் நான் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1ல் நான் தான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள பால்ராஜ் என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் வா.சா.ஆ.5 ஆகும். ஆனால் மேலே எழுதப்பட்டுள்ள சங்கதிகளை நான் எழுதவில்லை. எனது தந்தை இரண்டு வருடங்களில் கடனை திருப்பி செலுத்தி விடுவதாக வா.சா.ஆ.1ல் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் பணத்தை திருப்பி செலுத்திவிட்டதற்கான அத்தாட்சியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் எனது பதிலுரையில் ரூ.13 லட்சம் திருப்பி கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன்

என்றால் ஞாபகம் இல்லை. அதற்கான அத்தாட்சியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் ரூ.11,19,000/- கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான அத்தாட்சியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நாங்கள் வங்கி மூலம் ரூ.1,65,000/-ம் வட்டியாக கொடுத்ததாக வாதி சொல்லியுள்ளது சரிதான். நான் வா.சா.ஆ.1ல் உள்ள வா.சா.ஆ.5 கையொப்பத்தை 05.06.2021ல் போட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பாக வாதி அசல் தொகையை கொடுக்குமாறு கேட்டாரா என்றால் போன் மூலமாக கேட்டார். நாங்கள் சரியான பதிலை சொல்லாததால் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அசல் தொகையை கொண்டுபோன போது வாங்க மறுத்துவிட்டார். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு அசல் தொகையை கொடுத்துவிட்டேன். அப்போது சிகரெட் அட்டையில் எழுதிக்கொடுத்தார். அந்த அட்டை தற்போது என்னிடம் இல்லை. கானாமல் போய்விட்டது. நான் எந்த தொகையும் வாதிக்கு கொடுக்கவில்லை என்றும் வாதி கோரியவாறு அசல் மற்றும் வட்டியை நாங்கள் கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. அவ்வாறு கடனை திருப்பி கொடுத்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றும் கடனை திருப்பி கொடுக்காமல் பொய் சாட்சியம் அளிக்கறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.